RNI. No. TNBIL/2014/60761

# SCHOOL VOICE
# ஸ்கூல் வாய்ஸ்

Tamil & English Bi - Monthly Magazine

E-Mail: schoolvoice2014@gmail.com Website: tnprivateschools.com



என்றும் கிறிஸ்துதாஸ்
அவர்களின் வழியில்
எங்கள் பணி தொடரும்

Volume: 1 Issue:10 November -December 2016 Page: 8 Price: Rs.25/-

## தங்கத்தாரகை மறைவிற்கு சங்கத்தின் இதய அஞ்சலி!



10 வயதிலிருந்து பதினாறு வயது வரை நான் சர்ச் பார்க்கிலே 'பிரேக்' இல்லாமல் படித்தேன். ரியலி அவை எல்லாம் ஹேப்பி டேஸ். இன்னொரு சான்ஸ் கிடைத்தால், கடவுள் கொடுத்தால், குழந்தையாகவே இருக்கணும்னு விரும்பாதவங்க இருக்க மாட்டாங்க. என்னைப் பொறுத்தவரையில், குழந்தையாக இருப்பதைவிட... பள்ளி மாணவியாக இருக்கவே நான் விரும்புவேன். நான் அனுபவித்து மகிழ்ந்த நாட்கள் அவை.

– டாக்டர் ஜெ.ஜெயலலிதா



மாண்புமிகு பள்ளி கல்வித்துறை அமைச்சர் பாண்டியராஜனுடன் நமது மாநிலத தலைவர் மார்டின் கென்னடி, Adv ஜான் மறறும் சகோ ஐ.குமார்

## RTE சட்டத்திற்கு பின்
# கல்வித் தரத்தின் நிலை கவலைக்கிடம்... மீள்வோமா...?

எனது கல்வி எனது உரிமை என்ற தலைப்பில் CARE INDIA நிறுவனம் ஒரு RTE (கல்வி உரிமை சட்டம்) செல்பாடுகள் குறித்து நடைபெற்றதும் நடைபெற இருப்பதும் பற்றி இந்தியாவின் கல்வியாளர்கள் கலந்துக் கொண்ட கருத்தரங்கத்தில் புதிய கல்விக் கொள்கையை (2016ஐ) வடிவமைத்த குழுவின் தலைவர் டி.எஸ்.ஆர். சுப்பிரமணியன் (முன்னாள் மத்திய அரசின் தலைமை துறை செயலாளர் (Ex Cabinet Secretary) RTE இருந்தது ஏன் என விபரங்களை புட்டு புட்டு வைத்தார் 25% அளவிற்கு கல்வியின் தரம் கல்விச்சட்டம் வந்தபின் குறைந்துள்ளதாக குற்றம் சாட்டினார். RTE பல திட்டங்களை உள்ளடக்கியதாக இருந்தாலும் அதனை செயல்படுத்துவதில் நடைமுறை சிக்கல்கள் இருப்பதாக கூறினார். கற்றல் என்பது ஒரு குழந்தை உணவு உண்பது போலவும், சுவாசத்தை போன்றதாகும். அது இயல்பாக இருக்க வேண்டும்.

ஒரு குழந்தை ஆசிரியரிடமிருந்து கற்றுக் கொள்ள வேண்டியது இயல்பான ஒன்று. ஆனால் நாம் அதை ஒரு சிரமிகு செயலாக மாற்றியுள்ளோம் என்பது தான் உண்மை. 40 ஆண்டுகளுக்கு முன்பு HAWARD பல்கலைக்கழகத்தில் பயின்ற போது அந்த நாட்களிலேயே சொல்லிக் கொடுக்கப்பட்ட செய்தி என்னவெனில், ஒரு நாடு முன்னேற அடிப்படை தேவை பெண் குழந்தைகள் கல்வியறிவில் முன்னேறியிருக்க வேண்டும். இதே கருத்து இன்று வரை உள்ளது.



Adv ஜான்
வழக்கறிஞர்

தொடர்ச்சி 3ம் பக்கம் பார்க்க...

புள்ளிகள் சார்ந்த ஆலோசனைகளுக்கு...

புதிய நர்சரி பள்ளிகள், மெட்ரிக் பள்ளிகள், CBSE பள்ளிகள் ஆரம்பிக்க, அங்கீகாரம் தொடர்பான ஆலோசனை பெற கீழ்க்கண்ட சங்க நிர்வாகிகளை தொடர்பு கொள்க:

அருள்ராஜ்: 9884253306
ஆர்.எஸ்.டேனியல் 8124134249

பள்ளிகளுக்கு MINORITY STATUS வாங்க வேண்டுமா?
தொடர்பு கொள்க:
Adv. M.J.மார்டின்கென்னடி
9941334341
Adv. S.கார்த்திக்
9841220988

CMDA CORPORATION
கட்டிட வரைபட அனுமதி பெற தொடர்பு கொள்க..
Adv. S.கார்த்திக்
9841220988

# புதிய கல்விக் கொள்கைகள்...
## ஸ்கூல் வாய்சின் பார்வை

மத்திய அரசு கொண்டு வர இருக்கும் புதிய கல்விக் கொள்கைகளின் வரைவு பட்டியலிடப்பட்டுள்ளது. அவற்றுள் பள்ளிக கல்வித்துறைக்க தொடர்பான உட்பிரிவுகள் இதோ....



ஜவடேகர்
மத்திய அமைச்சர்

1. எட்டாம் வகுப்பு வை ஆல்பாஸ் கிடையாது RTE சட்டத்தின்படி எட்டாம் வகுப்பு வரை அனைவரும் தேர்ச்சி என்ற விதி ஐந்தாம் வகுப்பு வரை மட்டுமே என்ற மாற்றப்பட்டுள்ளது.



மார்டின் கென்னடி
மாநில தலைவர்

2. பாடநூலில் உள்ளவற்றை மனப்பாடம் செய்வது மட்டுமன்றி பாடத்தினை புரிந்து பதிலளிக்கும் வகையில் தேர்வுமுறை மாற்றப்படும்.

3. மாணவர்களின் பாட ஆர்வத்தினை அறிய, "கல்வி விருப்பத் தேர்வுகள் நடத்தப்பட்டு, திறமைக்கேற்ப பிற்காலத்தில் தொழில் வாய்ப்புகள் ஏற்படுத்த முயற்சிக்கப்படும்.

4. ஆங்கிலம், கணிதம், அறிவியல் ஆகிய 3 பாடங்களுக்கு தேசிய அளவிலான ஒரே பாடத்திட்டமும், மற்ற பாடங்களுக்கு தேசிய மற்றும் மாநில பாடத்திட்டங்களும் கலந்தும் பின்பற்றப்படும்.

5. பத்தாம் வகுப்பில் தோல்விகளை குறைக்க இரு நிலைகளில் (உயர்நிலை, குறைதகுதி நிலை) தேர்வுகள் நடத்தப்படும்.

6. பள்ளிகளில் குறைந்தபட்சம் இருக்க வேண்டிய வசதிகள் உள்ளதை உறுதி செய்யப்படும்.

7. பள்ளிகளை நிர்வாகம், உட்கட்டமைப்பு, ஆசிரியர் திறன் போன்ற மதிப்பீடு செய்து தரவரிசை தயாரிக்கப்படும்.

8. அவ்வாறு தரவரிசையில் கீழுள்ள பள்ளிகள் ஒருங்கிணைக்கப்பட்டு தொகுப்பு பள்ளிகளாக மாற்றப்படும்.

9. மேலும் சூழ்நிலைக்கேற்ப இப்போதைய கல்வி உரிமைச் சட்டத்தில் சில மாறுதல்கள் பரிந்துரைக் கப்படும்.

இவ்வாறாக அந்த விரைவில் புதிய கல்விக் கொள்கைகள் பற்றிக் குறிப்பிப் பட்டுள்ளது. எனினும் இந்த கொள்கை மாறுபாட்டை நாம் கூர்ந்து கவனிக்கையில் சில ஐயங்கள் நம் மனதில் எழாமல் இல்லை.

அடுத்த கொள்கைக் குளறுபடி, பத்தாம் வகுப்புகளில் இருநிலைத் தேர்வுகள், தேர்வு மதிப்பீட்டின் நோக்கமே, மாணவனின் கற்றல் அளவினை தெரிந்துக் கொண்டும், பின்தங்கிய மாணவர்களை உயர்த்துவதுதான். இந்நிலையில் தேர்வுகள் வைப்பது தோல்வியையை தழும். மூன்று பாடங்கள் தேசிய அளவிலும் மற்ற பாடங்கள் மாநில, தேசிய அளவிலும் இருக்கும் என்ற கொள்கை வரவேற்கத்தக்கதே. நாடு தழுவிய பள்ளிகளுக்கான தரவரிசையினையும் வரவேற்கலாம். ஆனால் அப்படி தரவரிசை அளிப்பதே, இவையெல்லாம் தரமில்லா பள்ளிகள்

தொடர்ச்சி 4ம் பக்கம் பார்க்க..

**பள்ளி நிர்வாகிகள், முதல்வர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் அனைவருக்கும்**

**புத்தாண்டு மற்றும் பொங்கல் நல்வாழ்த்துக்கள்**

–ஆசிரியர் குழு



இயக்குனர் திரு.கருப்புசாமி அவர்களுடன் நமது தலைவர் மார்டின் கென்னடி செயலர் சுந்தராஜ், பொருளர் விமல் மற்றும் உபதலைவர் ஜான் சேவியர் தங்கராஜ்.




**Dr.J.B.VIMAL** was felicitated for acumen service in the field of education. From the honourable Central Minister for textile **Mr.AJAY TAMTA** gave the coverted **GEM OF INDIA** to the Correspondent. The function was held at the prestigious Le-Merdian Hotel New Delhi in the Presence of Many prominent dignitaries haling from the various state of our country.

## ESI மத்திய அரசு புதிய முடிவு

ESI துறை அமைச்சர்களும் உயர்மன்ற குழுவும் சமீபத்தில் கூடியது. தொழில் துறை அமைச்சர் பண்டாரு தத்தாத்ரேயா அக்கூட்டத்தின் இறுதியில் கூறுகையில், 'ESI மருத்துவமனைகள் இன்னும் அதிகரிக்கப்படும். இஎஸ்ஐ உச்ச வரம்பு அதிகபட்ச சம்பளமாக 15,000 ரூபாய் மாத சம்பளம் பெறுவோர் வரை கட்ட வேண்டும் என்று இருந்தது. ஆனால் இந்த உச்ச வரம்பு 18,000 ரூபாய் முதல் 21,000 ரூபாய் வரை உயர்த்த வேண்டும் என மத்திய அரசுக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது' என கூறினார்.

இதனால் இனி மத்திய அரசு தொழில்கள் இத்துறையின் பரிந்துரையை ஏற்கும் பட்சத்தில், இனி 21,000 ரூபாய் வரை ஊதியம் பெறும் அனைத்து ஆசிரியர்களுக்கும் மற்ற பிற பணியாளர்களுக்கும் இஎஸ்ஐ கட்ட வேண்டி வரும். நமது சங்கத்தின் சார்பில் உயர் நீதிமன்றத்தில் இஎஸ்ஐ வழக்கு தொடரப்பட்டு தடை உத்தரவு பெறப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. மேலும், உரிய ஆலோசனை களை பெற வழக்கறிஞர் குமரவேல் (7871765150) என்ற எண்ணை தொடர்பு கொள்ளவும். For Clarification Regarding ESI Contact: ADV.Kumaravel 7871765150



மணிமேகலை செல்வராஜ்

### வங்கி கடன் 5,392 கோடி மானியம்

# கல்விக் கடனா? வாழ்க்கைக் கடனா?

2009 இல் மாணவர்கள் படிக்கும் காலங்களிலும் படிப்பு முடிவடைந்த நிலையிலும் தவணை விடுப்பு காரணத்தாலும் கல்வி கடனுக்கு 392 கோடி மானியம் வழங்க மனிதவள மேம்பாடு முடிவு செய்துள்ளது. ஏற்கனவே 5000 கோடி ரூபாயை மத்திய அரசு வட்டி மானியமாக உங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

Vidayalakshmi.com என்ற இணையத்திலும் ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, பாங்க் ஆப் பரோடா போன்ற 13 வங்கிகள் இந்த இணையதளத்தில் இணைந்துள்ளன. 22 வகையான கல்விக்கடன் பற்றிய விதிகளும் இந்த இணையதளத்தில் மாணவர்களின் கல்விக்கடன் பரிசீலனை பற்றிய விவரங்களை இந்த வங்கிகள் கடனுக்காக விண்ணப் பித்தவர்களின் விண்ணப்பங்கள் எந்த நிலையில் செயல்முறையில் உள்ளது என அறிந்து கொள்ள முடியும். இந்தியாவில் தமிழகத்தில் தான் கல்விக்கடன் அதிகமாக வழங்கப்பட்டுள்ளது. நாடு முழுவதும் மொத்தம் 61,176 கோடி ரூபாய் கல்விக்கடன் வழங்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் வராக் கடனை வசூலிக்க ஸ்டேட் பாங்க், ரிலையன்ஸ் நிறுவனத்திடம் பொறுப்பை ஒப்படைத்துள்ளது. ரிலையன்ஸ் நிறுவனம் கடன் செலுத்தாத மாணவர்களுக்கு நோட்டீஸ் அனுப்பப்பி வைத்துள்ளது. அதில் கடிதம் கண்ட 15



நாட்களில் கடனை கட்டத் தவறினால், தகுந்த நடவடிக்கை எடுப்போம் என எச்சரித்துள்ளனர். ரிலையன்ஸ் அதிகாரிகள் கடுமையான நடவடிக்கை எடுப்பார்கள் என மாணவர்களும் பெற்றோர்களும் அஞ்சுகின்றனர். கல்விக்கடன் ஏழை மாணவர்களுக்கும் பணக்கார மாணவர்களுக்கும் பாகுபாடின்றி வழங்கப்பட்டு வந்தாலும் திரும் செலுத்த வேண்டும் என்கிற மனப்பான்மை மாணவர்களிடம் பெரும்பாலும் இல்லை. கட்சிகளும் அரசுகளும் கல்விக் கடனை தள்ளுபடி செய்வதாக அறிவித்ததால் கடனை கட்ட வேண்டும் என்ற மனப்பான்மை உள்ளவர்களும் இதை ஏன் திரும்ப செலுத்த வேண்டும் என்ற நிலையில் உள்ளனர். ரிலையன்ஸ் நிறுவனத்தின் கடன் 1.75 லட்சம் கோடியாம். பெரும் கடன்காரர்களை விட்டு விட்டு சிறு கடன்களை வசூலிக்க செய்ய எஸ்.பி.ஐ., ரூ.1 லட்சத்திற்கு ரூ.40,000 டீல் என்கிற அடிப்படையில் ரிலையன்ஸிடம் கடன் தொகை வசூலிக்கும்



திருச்சி **மகேஷ்**

| கல்விக் கடன் |
|---|
| தமிழகத்தில் கடன் பெற்ற மாணவர்கள் **9.56** லட்சம் பேர் |
| கடன் பெற்ற மொத்த தொகை **16,380** கோடி |
| வராக் கடனாக இதுவரை **1,875.56** கோடி |

பணி கொடுக்கப்பட்டுள்ளது.

மேலும், ரிலையன்ஸ் நிறுவனம் நோட்டீஸ் அனுப்புவதோடு நிற்கப் போவதில்லை. கட்டுவீர்களா, கட்ட மாட்டீர்களா, கட்டவில்லை என்றால் நடவடிக்கை தான் என அச்சுறுத்தி வருகிறது. அரசின் நடவடிக்கை களில் இக் கல்வி கடன் தள்ளுபடியாகுமா அல்லது ரிலையன்ஸ் நிறுவனத்தின் தொந்தரவு தொடருமா?

ரிலையன்ஸ் என்றால் 'நம்பிக்கை' என்று பொருள். தமிழக அரசும், மத்திய அரசும் இம்மாணவர்களின் வாழ்வில் கடன்களை தள்ளுபடி செய்து நம்பிக்கை தருமா?



▶ விஜய் டிவி நீயா நானா கோபிநாத் அவர்களுடன் லயன் ஏ.முருகேஷ், எஸ்.கார்த்திக்




▶ கலாமின் மணற்சிற்பம் மற்றும் கலாமுடன் ஒரு செல்பி நிகழ்வுகள். குன்றத்தூர் லிட்டில் பிளவர் பள்ளி முதல்வர் ஜான் சேவியர் தங்கராஜ்.



▶ புதிய நீதிபதியாக பொறுப்பேற்றுக் கொண்ட மாண்புமிகு நீதிபதி சுரேஷ் குமார் அவர்களுடன் நமது சங்க நிர்வாகிகள்.




▶ பத்திரிகையாளர் மாநாட்டில் (TUJ) உரையாற்றும் எம்.ஜே.மார்டின் கென்னடி உடன் மேதகு ஆளுநர், மதுரை ஆதீனம், சின்கா (அகில இந்திய பத்திரிகை சங்க பொறுப்பாளர்) தமிழ்நாடு, பத்திரிகையாளர் சங்க தலைவர் சுபாஷ் ஆகியோருடன் மலேசிய பத்திரிகையாளர் டத்தோ தனஞ்செயன்.



▶ நமது சங்க மாநில நிர்வாகிகள் கூட்டத்தில் துடிப்புடன் செயல்படும் மத்திய செயற்குழு நிர்வாகிகள். (தீயா வேலை செய்யணும் குமாரு)

## சிபிஎஸ்இ செய்திகள்

சிபிஎஸ்இ பாடத்திட்டத்தில் 2010ம் ஆண்டு முதல் 10 வகுப்புக்கு இறுதி தேர்வு இரண்டு வகையில் நடைபெற்று வந்தது. சிபிஎஸ்இ பாடத்திட்டத்திலேயே பிளஸ் 1 படிப்பினை தொடங்க விரும்புவோர்க்கு பள்ளி இறுதித் தேர்வு நடத்தப்பட்டது. (அரசு தேர்வு அல்ல என்பது குறிப்பிடத்தக்கது).

பத்தாம் வகுப்புக்கு பின் ஐசிஎஸ்இ, ஸ்டேட் போர்டு, இன்டர்நேஷனல் கரிகுலம் போன்ற பல்வேறு பாடத்திட்டங்களில் சேர விரும்புவோர் மட்டும் சிபிஎஸ்இ பொது தேர்வு நடத்தப்பட்டு வருகிறது. கடந்த பொதுத் தேர்வு குறித்து சில மாநிலங்கள் எதிர்ப்பு தெரிவித்த நிலையில் மத்திய அரசு சிறப்புக் குழுவை அமைத்து ஆய்வு செய்து, பள்ளி அளவிலான தேர்வில் தரம் குறைந்து வந்தது தெரியவந்தது.

மேலும் சிபிஎஸ்இ ஆசிரியர்களும், பள்ளி நிர்வாகி களும் முறையிட்டதை யடுத்து, மத்திய அரசும் ஆலோசனைக் குழு (CABE) தேர்வினை ரத்து செய்ய பரிந்துரை செய்துள்ளது. எனவே வரும் கல்வியாண்டு முதல் அனைத்து மாணவ, மாணவியர்களுக்கும் பத்தாம் வகுப்பு இறுதித் தேர்வு பொதுத் தேர்வாக நடைபெற வேண்டும் என முடிவு செய்யப் பட்டுள்ளது. மேலும் ஆன்லைனில் சிபிஎஸ்இ பீஸ் கட்டுவதற்கான திட்டத்தை யும் மத்திய அரசு கொண்டு வந்துள்ளது.

மேலும் CBSE Principal யும், நியமனம் செய்யும் போதும் (PET) Principal Eligibility Test நடத்தவும் CBSE போர்டு தீர்மானத்துள்ளது.



சிவகங்கை **ஜெயதாஸ்**

# தேவை சிபிஎஸ்இ பாடத்திட்டம்!

## பள்ளிக் கல்வி நிலை ஆய்வறிக்கையில் அதிர்ச்சித் தகவல்

அண்மையில் ப்ரதம் என்ற அரசு சாரா அமைப்பு வெளியிட்ட அறிக்கையில் தமிழக பள்ளிக் கல்வியின் நிலை அதிர்ச்சி அளிக்கும்படியாக இருந்தது. ப்ரதமின் இந்த ஆய்வறிக்கை ஒரு மாதிரி கணக்கெடுப்பை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டது. இந்த அமைப்பு கடந்த 2005ம் ஆண்டு முதல் இதுபோன்ற ஆய்வறிக்கைகளை வெளியிட்டு வருகிறது.

கிராமங்களில் உள்ள 5ம் வகுப்பு மாணவர்களில் 31.9 சதவீதம் பேர் மட்டும் 2ம் வகுப்பு தமிழ் பாடப் புத்தகத்தில் உரைநடைப் பகுதியை வாசிக்க முடிந்ததாகவும், 14 சதவீதம் பேர் மட்டும் 3 இலக்க எண்ணை ஓர் இலக்க எண்ணால் வகுக்க முடிந்தது என்றும் அதில் தகவல் இடம்பெற்றிருந்தது. இந்த இரு கற்றல் விகிதங்களும் தேசிய அளவில் பார்க்கும் போது ஒவ்வொன்றும் 47 சதவீதமாக உள்ளன.

அதே நேரத்தில் தமிழக பள்ளிக் கல்வி பற்றி வேறு இரண்டு அறிக்கைகளும் கிடைத்துள்ளன. ஒன்று, என்.சி.இ.ஆர்.டி (National Council of Educational Research and Training) என்ற மத்திய அரசு நிறு வனத்தின் பள்ளிக் கல்வி பாடத்திட்டம் அமல்படுத்தப் படுவதை ஆராயும் அறிக்கை.

மற்றொன்று மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தின் பள்ளிக்கல்வி தொடர்பான புள்ளிவிவர அறிக்கை.

என்.சி.இ.ஆர்.டி. ஆராய்ச்சியின்படி, 2011ல் 5ம் வகுப்பில் ஒவ்வொரு வாரமும் எத்தனை வகுப்புகள் (periods) எடுக்கப்பட்டன. அவற்றில் ஒவ்வொரு பாடத்துக்கும் எத்தனை வகுப்புகள் ஒதுக்கப்பட்டன.

இதில் எல்லா பாடங்களுக்கும் எல்லா மாநிலங்களும் சற்றேறக்குறைய ஒரே மாதிரியான முக்கியத்துவம் அளிப்பது தெரிகிறது. ஒன்றில் தமிழகம் தனித்துவமாக உள்ளது. 5 பாடங்களைத் தவிர மற்ற பாடங்களான கலை, விளையாட்டு, கைவினை போன்றவற்றில் அதிக நேரம் செலவிடப்படுவதில்லை என்று தெரிகிறது. இதனால் மற்ற பாடங்களிலும் மாணவர்களின் செயல்திறன் குறையலாம்.

மத்திய அரசின் மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தின் கீழ் செயல்படும் தன்னாட்சி நிறுவனம் தேசிய கல்வி திட்டம் மற்றும் மேலாண்மை பல்கலைக்கழகம் இந்த நிறுவனம் மாவட்டக் கல்வி தகவல் முறை திட்டம் என்ற ஒரு திட்டத்தை தயாரித்து அதன் மூலம் எல்லா மாவட்டங்களிலும் உள்ள பள்ளிகளின் வசதிகள், மாணவர் சேர்க்கை, ஆசிரியர் எண்ணிக்கை உள்பட பல புள்ளிவிவரங் களை சேகரித்து கல்வி மேம்பாட்டு குறியீடு ஒன்றை தயாரிக்கிறது. இந்த குறியீட்டின்படி, ஆரம்பக் கல்வியில் இந்திய மாநிலங்களில் முதல் நிலையில் உள்ள தமிழகம், நடுநிலைக் கல்வியில் 7–ம் இடத்துக்கு தள்ளப்பட்டது குறித்து ஆராயப்பட வேண்டும். ஒன்று முதல் 8 வகுப்புக்கான மொத்த குறியீட்டின்படி தமிழகம், மாநிலங்கள் இடையே மூன்றாம் இடத்தைப் பெற்றுள்ளது.



சுந்தரராஜ்

இதுபோன்ற செய்திகள் தொடர்ந்து வரும்போது நம் பள்ளி கல்வித்திறன் பற்றிய சந்தேகங்கள் உறுதியாகின்றன. சில ஆண்டுகளுக்கு முன்பு அண்ணா பல்கலைக்கழகம், **பிளஸ் 2 தேர்வில் கணிதப் பாடத்தில் அதிக மதிப்பெண் பெற்ற மாணவர்கள், பொறியியல் முதல் ஆண்டு கணித பாடத்தில் தேர்ச்சி அடையவில்லை** என்பதால் அந்த மாணவர்களுக்கு சிறப்பு வகுப்புகள் நடத்த வேண்டியுள்ளது என்று கூறியது.

**ஆக மொத்தத்தில், தமிழகத்தில் பள்ளிகள் இருக்கின்றன. ஆசிரியர்கள் உள்ளனர். கற்றலும் கற்பித்தலும் நடக்கின்றன. ஆனால், கற்றலின் வெளிப்பாடு குறைவாக உள்ளது. எனவே நீட் பொதுத் தேர்வு, இன்னும் அகில இந்திய அளவில் நம் மாணவர்கள் விளங்க தமிழக பாடத்திட்டத்தை சிபிஎஸ்இ பாடத்திட்டங்களுக்கு இணையாக மாற்றி அமைக்க வேண்டும்.**

அல்லது சிபிஎஸ்இ பாடத்திங்களையே நமது மாநில அரசு, அரசு உதவி பெறும் பள்ளிகள், தனியார் பள்ளிகள் உள்ளிட்ட அனைத்து பள்ளிகளும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற நிலை ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதே கல்வியாளர்களின் கவலை. இதனை கல்வித்துறை கவனிக்குமா?

## கல்வித் தரத்தின் நிலை

முதல்பக்க தொடர்ச்சி

ஆனால் இந்த விஷயத்தில் நாம் முழுமை அடையவில்லை. நாட்டின் வளர்ச்சிக்காக பொருளாதாரத்தையும் புல்லட் டிரையினை பற்றி யோசிக்கும் நாம் அடிப்படைகளான சுகாதாரம், கல்வியினை மறந்து விடுகிறோம்.

மேலும், திரு.சுப்பிரமணியம் ASER கல்வியறிக்கை 2014ன்படி, நமது நாட்டில் கல்வியின் நிலைமை மிகவும் கவலைக்குரியதாக உள்ளது என்பது படம் பிடித்துக் காட்டியுள்ளது. அதாவது 50% 5ம் வகுப்பு குழந்தைகளுக்கு இரண்டாம் வகுப்பு புத்தகமே படிக்க தெரியவில்லை. மேலும் இப்பிள்ளைகள் அகர வரிசைப்படி எழுத்துக்களை புரியாமலேயே மேல் வகுப்புகளுக்கு சென்றிருக்கிறார்கள் என்பதுதான் மிகவும் கவலைக்குரிய விஷயம்.

எட்டு ஆண்டு பள்ளிப் படிப்பு முடித்தும் கூட்டல், கழித்தல் புரியவில்லை என்பது ஒரு இழிவு தரும் எண்ணிக்கையே என இன்றைய கல்வி நிலைமை குறித்து கூறினார். சமீபத்தில் மகாராஷ்டிரா மாநிலத்தில் வெளியான செய்தி அதிர்ச்சிக்குள்ளாக்கியது. 54,000 மாணவ, மாணவியர்கள் பள்ளிக்கு செல்லாமலேயே தேர்ச்சி பெற்றுள்ளனர். அதாவது RTE பிரிவின் அடிப்படையில் பள்ளியில் இணைந்த மாணவ, மாணவியர்களை வருகை பதிவேடு அல்லது பள்ளியிலிருந்து நீக்குதலோ கூடாது. அல்லது சரியான முறையில் படிக்காவிட்டாலும் தேர்வில் தோல்வியடைய செய்யக் கூடாது என்பதுதான் இந்த இழிவிற்கு காரணம்.

மேலும் RTE இத்தகைய பள்ளிக்கு வராத மாணவர்களை முறையாக பயிலாத மாணவர்களை, அவர்கள் வரவில்லையென்றாலும் அதனை ஆப்சென்ட் என்று வருகைப்பதிவில் போடப்பட வேண்டும் என்றும் வருட இறுதியில் அடுத்த வகுப்பிற்கு செல்ல வேண்டும் என்பது இந்த ASR 2014 படி மாணவ, மாணவியர்களின் கல்வியின் தரம் குறைந்ததற்கும் குறைப்புகளுக்கும் மொத்த காரணமாக அமைந்துள்ளதுதான் ஹைலைட்.

– ஆசிரியர் Adv **ஜான்** வழக்கறிஞர்.



▶ தினமலர் பட்டம் மாணவர் பதிப்பு விழாவில் தினமலரின் விற்பனை பிரிவு பொதுமேலாளர் (G,M,) Srinivasan Rama Subbu




▶ சத்தியம் தொலைக்காட்சி பட்டிமன்ற விழாவில் திரு.ஆவனி மாடசாமி அவர்களுடன்...



▶ YMCA MADRAS Celebrates Dr.A.P.J.Abdul Kalam Birthday. கருணை கரங்கள்.



▶ Xseed Conference at Chennai with Mr.Premkumar David.



▶ சென்னை மாவட்ட நர்சரி பள்ளிகள் கூட்டத்தில்...



▶ Dr. Abdul Kalam Birth Day with Kutty Abdul Kalams at Chennai.



▶ State Minority Commission member MR.SUDHIR LODHA and MRS. SUDHIR LODHA receives Holy blessing from our Beloved POPE FRANCIS


**No.1 SMS Solution for Schools**

Mi School — Redefining School-Parent Communication

Highlights:
•Send SMS from anywhere, anytime
•Quick SMS Transmission including DND
•Zero Transmission Failure
•Multilingual & Voice Enabled SMS
•Message Content Authentication
•High Database Security & Controlled operations

Key Features:
▪Instantly inform parents on important / urgent matters
▪Automatically send Fee Reminders / Fee Receipts to parents
▪Inform parents on ward's attendance / home work/ extra classes
▪Inform parents on wards' exam schedules, time table, exam results.
▪Invite parents on special days / events / PTA activities, etc
▪Update parents on bus pick up timing /delay / deviation., etc
▪Many more...

Advantages:
•Easy to communicate with all parents / teachers / staff
•Saves time, efforts and cost.
•Lowest price with flexible payment options
•Trial run with guaranteed payment refund options*
•24hrs Emergency SMS support

Our Credibility:
▪First company to develop SMS solution for Schools in Tamil Nadu
▪9 years of proven track record with reputed Schools in Tamil Nadu
▪18 years of IT support, experience & expertise
▪Reputable Corporate Company background
▪Prompt service and reliable support

•Booking open for Academic year 2017-18
•Guaranteed refund if not satisfied*
•Flexible payment options

Call 9677006661 / 044-4212 0104/6/9

Also we provide:
•Dedicated staff placement services to send SMS from Schools
•SMS sending service on behalf of School management
•School Website creation, web hosting & maintenance
•Complete School Management Solutions (ERP)
•RFID, GPRS, Fingerprint Attendance System

GEM Software Solutions Limited
(Part of Gem Group Companies)
Chamiers Towers, 5th Floor, No.37 Chamiers Road, Teynampet, Chennai-600018. India
Mobile: 9677006661 / 9677026444: Landline: 044-4212 0104 / 4212 0106/ 4212 0109
Email us: sales@gemsoft.co.in / info@gemsoft.co.in

a Product of GEM Group Chennai
Mi Office — Redefining Corporate Communication
Mi College — Redefining College - Parent Communication

* Conditions Apply



திருச்சி மாவட்ட கூட்டத்தில் உரையாற்றும் நமது தலைவர் மார்டின் கென்னடி உடன் பொதுச் செயலாளர் சுந்தரராஜன், திருச்சி ஜேசுராஜா, மகேஷ் ஆகியோருடன் ஸ்கூல் வாய்ஸ் எடிட்டர் ADV ஜான் அவர்கள்



கிழக்கு சென்னை ஸ்கவுட் கேம்பில் முன்னாள் ஜாயின்ட் டைரக்டர் ஸ்ரீ ராஜேந்திரன், திரு.பாலமுருகன் (Headmaster Vallal HSS), Madam Bakkiyam Thangaraj, ADV John, Trainer Emily.



Table Tennis Tournament at Madras YMCA.



புதுக்கோட்டை மாவட்டத்தின் புதிய பொறுப்பாளர்கள்.



மாண்புமிகு நீதியரசர் டி.என். வள்ளிநாயகம் அவர்களுடன் Lion A.MURUGESH.



746 பள்ளிகள் வழக்கு ஆலோசனையில் நமது பொருளாளர் டாக்டர் ஜே.பி. விமல் மற்றும் தலைவர் மார்டின் கென்னடி.



மாண்புமிகு கல்வி அமைச்சர் மா.ஃபொ பாண்டியராஜன் அருட்தந்தை ஜெரி மற்றும் YMCA உப தலைவர் வின்சென்ட் ஜார்ஜ் ஆகியோருடன் நமது தலைவர் மார்டின் கென்னடி.



சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர்கள் சங்கத் தலைவர் திரு.மோகனகிருஷ்ணின் வெற்றியை 'ஸ்கூல் வாய்ஸ்' சார்பில் நமது வழக்கறிஞர் நண்பர்கள் பாராட்டும் போது....



Global Hospiltal-ல் Seminar for Teachers with Mr.Nemidoss.



வழக்கறிஞர் நண்பர்களுடன் நமது தலைவர் மார்டின் கென்னடி.

## Statistics prepared by Dr. Geetha kingston Gandhi , London

**READING achievement levels in India**
**ASER Report, 2010 to 2014**

**Table 6: Trends over time**
**% Children in Std IV and V at different READING levels by school type 2010-2014**

| Year | % Children in Std IV who can read at least Std I level text | | | % Children in Std V who can read Std II level text | | |
|---|---|---|---|---|---|---|
| | Govt. | Pvt. | Govt. & Pvt.* | Govt. | Pvt. | Govt. & Pvt.* |
| 2010 | 65.5 | 76.2 | 67.7 | 50.7 | 64.2 | 53.7 |
| 2011 | 55.8 | 73.9 | 60.0 | 43.8 | 62.7 | 48.3 |
| 2012 | 50.5 | 70.1 | 55.7 | 41.7 | 61.2 | 46.9 |
| 2013 | 50.3 | 74.2 | 56.6 | 41.1 | 63.3 | 47.0 |
| 2014 | 49.2 | 73.1 | 56.3 | 42.2 | 62.5 | 48.1 |

* This is the weighted average for children in government and private schools only.

**ஆசிரியர்:** ரூபாய் நோட்டு பத்தி ரெண்டு வரில ஏதாவது சொல்லு?
**மாணவன்:** RBI அடிக்குது ! CBI பிடிக்குது !!



# புதிய கல்விக் கொள்கைகள்...

முதல் பக்க தொடர்ச்சி

என முத்திரை குத்தி மூடிட வழிவகை செய்துவிடக்கூடாது என்பதையும் நினைவு கொள்ளுதல் வேண்டும். பல ஆண்டுகளால் (40 ஆண்டுகளுக்கு மேலாய்) நடத்தப்பட்டு வரும் பள்ளிகள், குறிப்பாக ஸ்லம் அருகில் குடிசைகள் மத்தியில், மத்திய தர மக்கள் வசிக்கும் பகுதியில் தொடர்ந்து நடத்தப்பட்டு சீரிய கல்விச சேவையை எளிய மக்களுக்கு வழங்க வரும் (Budget Private Schools) மக்களுக்கு உகந்த பள்ளிகள், 2006 ஜிஓ 48 மற்றும் ஜிஓ 49தினால் 746 மெட்ரிக் பள்ளிகளும், 300க்கும் மேற்பட்ட அரசு உதவி பெறும் பள்ளிகளும், மூட்டப்படும் தருவாயில் உள்ளன. மேலும் 3 ஆயிரத்திற்கும் அதிகமான மெட்ரிக் பள்ளிகள் MMD, DCTP அனுமதி பெறாததால் உரிய தொடர் அங்கீகாரம் பெற முடியாமல் உள்ளன. கிட்டத்தட்ட 17 லட்சம் மாணவர்கள் இத்தகைய RTE 2009. தெளிவற்ற விதிகளால் மாற்றப்படுகின்றனர். நம் தமிழகத்தில் மட்டும் நிலைமை இப்படி என்றால், அகில இந்திய அளவில் கிட்டதட்ட 65,000 பள்ளிகள் பாதிக்கப்படும் என்கிற நிலை உள்ளது. எனவே RTE act2009க்க முன் உள்ள பள்ளிக்கு நிலம் மற்றும் உட்கட்ட அமைப்பு விதிகளிலிருந்தும் விலக்கு அளிக்கப்பட வேண்டும். மேலும், தொடர் அங்கீகாரம் பெற எளிய வகைகள் வகுக்கப்பட வேண்டும்.

மேலும் RTE வழக்கில் உச்சநீதிமன்றம் நீதிபதிகளைக் கொண்ட மிகப் பெரிய அமர்வில் Minority Rights சிறுபான்மை கல்வி நிறுவனத்துக்கான உரிமைகளை வழங்கியுள்ளதையும் நாம் கருத்தில் கொண்டு புதிய கல்விக் கொள்கையை மத்திய அரசு நிறைவேற்ற வேண்டும். தமிழக அரசும் புதிய கல்விக் கொள்கையில் தன்னை உரிய திட்டத்தோடு வழிமுறைகளை மத்திய அரசுக்க ஆலோசனை வழங்க வேண்டும் என்கிற கோரிக்கையோடு சிறுபான்மை பள்ளிகள் கேரளாவில் தனியானதொரு Model Report வெளியிட்டு, அதனை மேதகு பேராயர் ஜார்ஜ் அவர்கள தலைமையில் மத்திய அமைச்சர் ஜவடேகர் அவர்களிடமும், வழங்கியுள்ளனர். கல்வி நிறுவனங்களுக்கான நலன் மற்றும் உரிமை என்பது நமது அரசியலமைப்பு சட்டம் நமக்கு வழங்கியுள்ளது.

இச்சட்டம் அமலுக்கு வந்து 5 ஆண்டுகள் ஆகியும் கல்வி உரிமைகள் மறுக்கப்பட்டுதான் வருகின்றன. கல்வி தரத்தை மேம்படுத்துவதை விட்டுவிட்டு, மாணவர்களுக்கு தரமான கல்வி தரவேண்டும் என்பதை தவிர்த்து, பள்ளிகளுக்கு, ஆசிரியர்களுக்கு, நிர்வாகிகளுக்கு எந்தெந்த வகையில் இச்சட்டத்தினால் இடைஞ்சல்கள், தடைகள் ஏற்படுத்தலாம் என்பதை திட்டமிட்டே சில கல்வித்துறை அதிகாரிகள் குறியாக செயல்பட்டு வருகின்றனர்.

மாணவர்களின் உரிமை பேசும் ஆர்டிஇ ஆசிரியர்களின் இயல்பான உரிமைகளை தடை செய்கிறது என்பதுதான் உண்மை. மொத்தத்தில் 5 ஆண்டுகள் கல்வி உரிமைச் சட்டத்தின் பயன்பாட்டை திரும்பிப் பார்த்தால் கல்வி உரிமைச் சட்டம் தோல்வியுள்ளதோ என தோன்றுகிறது.

மேலும் புதிய கல்விக் கொள்கைக்கு வரைவு நிலையிலேயே பல எதிர்ப்புகளையும், விமர்சனங்களையும் பெற்றுள்ளது என்பதை கருத்தில் கொண்டு புதிய கல்விக் கொள்கையினை வெளிக்கொணர்தல் அவசியம். அவ்வாறு தேவையான மாற்றங்களை செய்தால் இந்த புதிய கல்விக் கொள்கை வெற்றி அடையும் என்பது நிச்சயம்.

**டெய்ல் பீஸ்:** MHRD **மனிதவளத்துறை அமைச்சர் இந்த புதிய கல்விக் கொள்கை எப்படி செல்படுத்துவது என்பதை தீர்மானிக்க புதிய கல்விக்குழு - புதிய கல்விக் கொள்கை அமைக்கப்படும் என கூறியுள்ளார்.**

**– மார்டின் கென்னடி.**

# 746 LESS LAND பள்ளிகள் ஒரு கண்ணோட்டம்...

1. 1974ல் 20 மெட்ரிகுலேசன் பள்ளிகள் மட்டுமே இருந்தது.
2. முதல் அரசாணை எண் எம்.எஸ்.2016 நவம்பர் 1976 இல் பல்கலை கட்டுப் பாட்டில் இருந்து மெட்ரிகுலேசன் பள்ளிகள் பள்ளி கல்வி துறைக்கு மாற்றப்பட்டது.
3. 1978ல் மெட்ரிகுலேசன் போர்டு உருவாக்கப்பட்டது. மெட்ரிக் பள்ளிகள் பல்கலைக் கழகத்திலிருந்து எடுக்கப்பட்டு பள்ளி கல்வித் துறை நிர்வாகத்தின் கீழ் வந்தது. அன்றிலிருந்து 2006 வரை குறைந்த அளவு நிலப்பரப்பு குறிப்பிடப்படவில்லை.

## 2004 கும்பகோணம் தீ விபத்து

1 தீ விபத்து ஏற்பட்டுள்ள பள்ளி: ஸ்ரீ கிருஷ்ணா அரசு உதவி பெறும் துவக்கப்பள்ளி

2 தீ விபத்துக்கான காரணம்: சத்துணவுக் கூடத்தில் இருந்து பரவிய தீ மேல் மாடி ஓலைக் கூரை வேய்ந்த கட்டிடத்தில் பட்டு தீப்பிடித்தது.

3 தாக்கம்: கி.மு. மற்றும் கி.பி. போல, கு.வி.மு (கும்பகோணம் விபத்துக்கு முன்) கு.வி.பி. (கும்பகோணம் விபத்துக்கு பின்)

4 தீ விபத்து காரணமாக தமிழக அரசால் அமைக்கப்பட்ட கமிட்டிகள்.

# கும்பகோணம் தீ விபத்து காரணமாக தமிழக அரசால் அமைக்கப்பட்ட கமிட்டிகள்

## சிட்டி பாபு கமிட்டி

தனியார் மெட்ரிக் பள்ளிகளுக்கான இடம் நிர்ணம் G.O.48 தனியார் மெட்ரிக் பள்ளிகளுக்கு

மாநகராட்சி 6 கிரவுண்டு

நகராட்சி 10 கிரவுண்டு

பேரூராட்சி 1 ஏக்கர்

ஊராட்சி 3 ஏக்கர்

சிட்டி பாபு கமிட்டி பரிந்துரை 2006 ஆம் ஆண்டு முதல் விளையாட்டு மைதானம் இல்லாத பள்ளிகள் அருகில் உள்ள மாநகராட்சி, நகராட்சி, ஊராட்சி விளையாட்டு திடல்களை பயன்படுத்திக் கொள்ள அனுமதிக்க வேண்டும்.

G.O.49 அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கான இடம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மேலே குறிப்பிட்டுள்ள மெட்ரிக் பள்ளிகளுக்கான விதிமுறை இவற்றுக்கும் பொருந்தும்.

G.O. 48ன் படி ஒரு மாணவருக்கு 9 லிருந்து 10 சதுர அடி அளவு இருக்க வேண்டும். மாணவர்களின் இருக்கை மாணவர்களின் எண்ணிக்கை அடிப்படையில் இருக்க வேண்டும்.

## நீதியரசர் சம்பத் விசாரணை கமிஷன்

விபத்துக்கான காரணங்கள், பள்ளி உட்கட்டமைப்பு சீர்த்திருத்தங்கள் G.O.131 Findings

1 தடை செய்யப்பட்ட ஓலை கூரை, வகுப்பு அறையின் அருகாமையில் இருந்ததே இவ்விபத்துக்கான காரணம்.

2 வகுப்பறையும் சத்துணவு சமையல் கூடமும் ஒன்றாக இணைந்து ஓலை கூரையால் அமைக்கப்பட்ட கட்டிடம் இருந்தது (மெட்ரிகுலேசன் பள்ளிகளில் சத்துணவு கூட சமையலறை இல்லை)

3 ஏற்கனவே அப்புறப்படுத்தப்பட்ட ஓலைகள் சத்துணவு அமைக்கும் சமையல் கூடத்தில் இருந்தது. தீயணைப்பு சாதனங்கள் மற்றும் தீயணைப்பு பயன்படுத்தும் அளவிற்கு தண்ணீரும் இல்லை.

4 தீ விபத்து நடைபெற்ற அரசு உதவி பெறும் கிருஷ்ணா துவக்கப் பள்ளியில் இந்த உதவி பெறும் பள்ளிக்கு சம்மந்தமில்லாத ஸ்ரீ கிருஷ்ணா நர்சரி பள்ளி மாணவர்கள், அரசு நிதி உதவியை முறைகேடாக பெரும் பொருட்டு வருகை பதிவேட்டில் (Attentence) முறைகேடாக மாணவர்களின் எண்ணிக்கையை உயர்த்தி காட்டும் நோக்கிலும் நர்சரி பள்ளி மாணவர்கள் அமர்த்தப்பட்டுள்ளனர்.


நீதிபதி சம்பத்

5 மேலும் சம்பத் கமிஷன் இவ்விபத்து சத்துணவு, மதிய உணவு தயாரிக்கும் அலுவலரின் மெத்தனப் போக்கினால் தான் இத்தகைய தீ விபத்தும் இழப்பும் ஏற்பட்டது.

நீதிபதி சம்பத் அவர்கள் சமீபத்தில் மறைந்தார். அவர்களின் ஆன்மா சாந்தி அடைய 'ஸ்கூல் வாய்ஸ்' பிரார்த்திக்கிறது.

## சமீபத்தில் அரசு உதவி பெறும் பள்ளியில் சத்துணவு கூடத்தில் தீ விபத்து

சமீபத்தில் கூட இராயப்பேட்டை பீட்டர் சாலையில் அரசு உதவி பெறும் மேல்நிலைப் பள்ளியில் சத்துணவு கூடத்தில் வைக்கப்பட்டிருந்த 3 சிலிண்டர்கள் அதிகாலையில் வெடித்து சிதறியது. 30 தீயணைப்பு வீரர்கள் ஒரு மணி நேரம் போராடி தீயை கட்டுக்குள் கொண்டு வந்தது குறிப்பிடத்தக்கது. சிலிண்டர் அல்லது சத்துணவு கூடமோ தனியார் மெட்ரிக் பள்ளி களுக்கு பொருந்தாது என்பதை ஏன் அரசும் மற்றவர்களும் மறைக் கிறார்கள் என்பது நமது மனதில் எழும் சந்தேகங்களில் ஒன்று. சத்துணவு கூடங்கள் பள்ளி வகுப்பறை கட்டிடங்களில் இருந்து தனியாக பிரிக்கப்பட வேண்டும் என்பதே நடுநிலையாளர்களின் கருத்து.

## மெட்ரிக் பள்ளிகளுக்கு பாதிப்பு

2004 தீ விபத்துக்கு முன்னதாக அங்கீகாரம் பெற்று நடைபெற்று வரும் பளளிகள் 2006 சிட்டி பாபு குழு (குறைந்த அளவு இடம் நிர்ணயம்) அறிக்கை செய்யப்படுவதற்கு முன்பாக அங்கீகாரம் பெற்று நடைபெற்று வரும் பள்ளிகள்.

2008 அரசாணையில் 2 இடங்களில் வகுப்புகள் செயல்படும் பள்ளிகள் உரிய அனுமதியை பெற்று நடத்தலாம் என்கிற அரசின் பரிந்துரை.

2010 அரசாணையில் ஒரே இடத்தில் நிர்ணயிக்கப்பட்ட நிலப்பரப்பு அமைய வேண்டும் என்கின்ற நடைமுறைக்கு சாத்தியமில்லாத முன்னுக்கு பின் முரணான விதிமுறை ஏற்கனவே அனுமதி பெற்று 2 இடங்களில் நடைபெறும் பள்ளிகளில் கொடுக்கப்பட்டுள்ளது. (எப்படி விணீரீவீரீ செய்வது என அரசு அதிகாரிகளிடம் தான் இதை கற்றுக் கொள்ள வேண்டும்)

அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகள் 2 இடங்களில் எந்த வித தங்கு தடையின்றி நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

### பாதிக்கப்படும் மாணவர்கள்

G.O.48, தனியார் மெட்ரிக் பள்ளிகள்: 5.2 லட்சம் மாணவர்கள், 20 ஆயிரம் ஆசிரியர்கள். G.O.49 அரசு உதவி பெறும் உயர்நிலை மற்றும் மேல்நிலை பள்ளிகள்: 6 லட்சம் மாணவர்கள், 25 ஆயிரம் ஆசிரியர் பெருமக்கள்.

## பெற்றோர்களின் விருப்பம்



பெற்றோர் சங்கத்தின் அமைப்பு செயலாளர் திரு. வில்லியம்ஸ் அவர்கள் கூறியது: இந்த 746 பள்ளிகளும் 2004 முன்னதாக அந்தக் காலகட்டத்தில் தேவையான உட்கட்டமைப்பினை ஏற்படுத்தி உரிய அனுமதி பெற்றவை. மேலும், இந்த 746 பள்ளிகளில் மிகப்பெரிய கட்டணத் தொகை இல்லை. இவை Budget Private School or Affordable Schools என தேசிய அளவில் அழைக்கப்படுபவை. அதாவது அரசு அல்லது அரசு உதவி பெறும் பள்ளியில் தமிழக அரசு ஒரு மாணவருக்கு ஆண்டுக்கு செலவு செய்யும் செலவான ரூ. 30,000 விட குறைவான பணத்தை பெற்றுக் கொண்டு நிறைவான சேவையை வழங்கிடும் பள்ளிகள். இந்தப் பள்ளிகள் பாதுகாக்கப்பட வேண்டும்.

மத்திய அரசு கொண்டு வந்த நீட் தேர்வு போன்ற போட்டி தேர்வுகளை எழுத வேண்டும் என அறிவுறுத்தும் தமிழக அரசு, எமது பிள்ளைகளின் எதிர்காலம் தரமற்ற கல்வியினால் என்கிற கேள்விகளோடு அரசும் புதிதாக அமைக்கப்பட்டுள்ள கமிட்டியும் ஆய்வு செய்து, இப்பள்ளிகள் தொடர அனுமதிக்க வேண்டும் என்பதே எம்போன்ற பெற்றோர்களின் ஆவல்.

1 லட்சத்திற்கு மேல் வசூலிக்கும் மிகப்பெரிய தனியார் பள்ளிகள் உரிய அனுமதியே இல்லாமல், ஒரே நேரத்தில் 40 பள்ளிகள் ஆரம்பிக்க அனுமதி கொடுத்துவிட்டு, இந்த நடுத்தர மக்களின் ஏழை மக்களின் பிள்ளைகள் பயிலும் பள்ளிகளை மூட நினைப்பதை ஒருநாளும் நாங்கள் அனுமதிக்க முடியாது. எங்கள் மாணவர்களின் எதிர்காலத்தை அரசு கவனத்தில் கொள்ள வேண்டும். புதிய பல்லுனர் குழுவினரிடமும் நாங்கள் எங்களது பெற்றோர் அறிக்கை தாக்கல் செய்வோம் எனக்கூறினார்.

## நமக்கு நாமே! வெற்றி நமதே!

பாதிக்கப்பட்ட 746 பள்ளிகளும் இன்னும் DCTP-CMDA கட்டிட அனுமதி பிரச்சனையால் பாதிக்கப்பட்டுள்ள பள்ளிகள் ஒன்றிணைந்தால் ஒரு ஒற்றுமையான முயற்சிக்கு வழிகாட்ட இயலும். தடைகளை உடைக்க இயலும். வெற்றிகளை பெற இயலும். பள்ளிகள் மூடப்படும் என்கிற பயத்தை விட்டொழியுங்கள். எனவே இது விஷயமாக 'நமக்கு நாமே' என்கிற ஓர் அமைப்பை நாங்கள் ஏற்படுத்தி இருக்கிறோம். இதில் நீங்களும் பங்கு கொள்ள, பாதிக்கப்பட்ட பள்ளிகளின் நிர்வாகிகள் தொடர்பு கொண்டு இந்தக் குழுவில் உறுப்பினராகுங்கள்.

Adv ஜான் 9940051234

Adv கார்த்திக் 9841220988

Adv குமாரவேல் 7871765150

## வழக்கின் தற்போதைய நிலை


Adv வில்சன்

மாற்றம் இந்தியா அமைப்பின் இயக்குனர் பாடம் நாராயணன் தொடர்ந்த வழக்கின் கோரிக்கை:

1. இடம் அளவு குறைவாய் உள்ள தனியார் மெட்ரிக் பள்ளிகள் மூடப்பட வேண்டும்.

2. குறைந்த அளவு இடம் பெற்றுள்ள இந்த 746 தனியார் மெட்ரிக் பளளி மாணவர்கள் அருகாமையில் உள்ள அரசு பள்ளிகள் அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளில் சேர்க்கப்பட வேண்டும்.

முந்தைய அமர்வில் தலைமை நீதிபதியின் பரிந்துரையின் பேரில் அமைக்கப்பட்ட வல்லுநர் குழுவில் துணைவேந்தர் சிட்டி பாபு, திரு.இராஜகோபாலன், திருமதி லலிதா ஆகியோரை வல்லுநர் குழுவில் இணைத்ததற்கான G.O. நீதிமன்றத்தில் தமிழக அரசால் சமர்ப்பிக்கப்பட்டது. இதனை ஏற்றுக் கொண்ட நீதிபதிகள் வல்லுநர் குழுவிற்கு மேலும் 2 மாதம் அவகாசம் கொடுத்து வழக்கை ஒத்தி வைத்தனர்.

மேலும் நமது சங்கத்தின் சார்பில் சீனியர் வழக்கறிஞர் வில்சன் மற்றும் சிறந்த வழக்கறிஞர் சங்கரன் ஆகியோர் வாதாடினார்கள். வில்சன் அவர்கள் ஏற்கனவே ஜிஓ 48ஐ ரத்து செய்ய வேண்டும் என 38 வழக்குகள் நிலுவையில் உள்ளது என்று தலைமை நீதிபதிகளிடம் கூறினார். அவ்வழக்குகளை ஒரே நேரத்தில் இந்த வழக்கோடு சேர்த்து விசாரணைக்கு ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்கிற கோரிக்கையும் தலைமை நீதிபதியால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.


Adv சங்கரன்

ஏற்கனவே கடந்த மே மாதமே பள்ளிகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய நமது சங்கம் வழக்கினை தொடுத்து தடை ஆணை பெற்று பாடம் நாராயணனின் வழக்கை நம்மையும் ஒரு தரப்பாக சேர்க்கப்பட்டு, நமது பள்ளிகள் காப்பாற்றப்பட்டுள்ளன. இன்றும், வரும் புதிய ஆண்டில் நல்ல முடிவு ஏற்படும் என்கிற நம்பிக்கையோடு இந்த செய்தியை நிறைவு செய்கிறோம்.

மேலும் இன்னும் பிற ஆலோசனைகள் இவ்விசயத்தில் கூற முன்வந்தால் தொடர்பு கொள்ள வழக்கறிஞர் ஜான் செல்: 99400 51234.

# ஸ்கூல் வாய்ஸ்-ன் சிறப்பு பாராட்டு!

மாநிலத்தின் பல பகுதிகளில் சீரிய பணியாற்றி, இன்று எழில்மிகு சென்னையில் உள்ள மெட்ரிக் பள்ளிகளுக்கெல்லாம் ஒரு வழிகாட்டியாய் விளங்கும் IMS மனோகரன் சார் அவர்கள்... கடந்த மாதத்தில் அவர் 91 வழிமுறைகளை நெறிப்படுத்தி, மாணவர்களின் நலன், பள்ளிகளின் நலன், ஆசிரியர் மற்றும் தலைமை ஆசிரியரின் பணிகள் பற்றி மிகச்சிறப்பாக விரிவாக எடுத்துக் கூறியவர். சென்னை மெட்ரிக்குலேஷன் அலுவலகத்தில் பணியோ மிகுதி! பணியாளர்களோ குறைவு என்கிற நிலையில். சிறப்பானதொரு முறையில், நமக்கு RTE Claim forms பணிகளை செய்து முடித்த 'மெட்ரிக் ஆய்வாளர்' மனோகரன் அவர்களையும், உதவி ஆய்வாளர் D.I.சத்தியமூர்த்தி அவர்களையும், மற்றும் அலுவலர்களையும் மிகச்சிறப்பாக ஸ்கூல் வாய்ஸ் பாராட்டுகிறது.

**RTE REFUND**
Claim Forms In Chennai IMS

| Year | Student | Amount |
|---|---|---|
| 2013-14 | 1530 | 1.80 Crores |
| 2014-15 | 2177 | 2.26 Crores |
| 2015-16 | 2249 | 2.29 Crores |
| Total | 5956 | 6.35 Crores |


சென்னை IMS மனோகரன் அவர்களுக்கு பாராட்டு



# நீட் (NEET) குழப்பம் தீருமா?

## ஜெயம் அகாடமி டைரக்டர் பீட்டர் சகாயராஜ் அவர்களுடன் நேர்காணல்.

**நிருபர்: ஆமாம்! இந்த NEET கண்டு நம் மாணவர்களெல் லாம் எதிர்காலமே இருண்டது என்பது போல நினைக் கிறார்களே? இது சரியா?**

பதில்: இல்லை. இது நம் தமிழகத்திற்கு புதிதாக இருக்கலாம். ஆனால் ஏற்கனவே அதில் இந்திய அளவில் AIMPMT 2011 வரை நடைபெற்ற ENTRANCE EXAM இன்று பெயர் மாற்றப்பட்டு NEET ஆக மத்திய அரசோடு இணைந்து உச்ச நீதிமன்ற வழிகாட்டுதலின் படி வரையறுக்கப்பட்டதுதான் இந்த NEET. கிட்டத்தட்ட 30 மாநிலங்களில் இதற்கு ஒப்புதல் அளித்துள்ள நிலையில் தமிழகமும் மற்றும் ஒரு சில மாநிலங்களும் இறுதி முடிவை இதுவரை அறிவிக்கவில்லை. அதன்பின்பு தான், இந்த NEET நமது மாநிலத்தில் என்ன செய்யப் போகிறோம் என்பதை அறியலாம்.



சமீபத்தில் தமிழக அரசு சார்பில் கல்வித்துறை அமைச்சர் பாண்டியராஜன் NEET குறித்து பேசிய போது, நமது மாணவர்களும் வரும் ஆண்டில் NEET தேர்வு எழுதுகின்றர். அரசு பள்ளி மாணவர்களும் இந்த NEET தேர்வை எழுதலாம் என்ற வகையில் மாநிலத்தில் பல இடங்களில் பயிற்சி நிலையங்கள் ஏற்படுத்தப்படும் என கூறியுள்ளார். NEET தேர்வை எழுதுவதற்கு தயார் செய்வதால் இந்த உச்சநீதிமன்ற வழக்கில் நமது வழக்கை திரும்ப பெறப்போகிறோம் என்றல்ல. தமிழக அரசின் சார்பில் தொடரப்பட்ட NEETக்கு எதிரான வழக்க. தொடர்ந்து நடைபெறும். ஆனால், வரும் கல்வி ஆண்டில் நமது தமிழக மாணவர்களின் எதிர்காலம் பாதிக்கப்படக்கூடாது என்பதற்கே NEET தேர்வில் தமிழக அரசு இம்முடிவை எடுத்துள்ளதாக கூறினார். மத்திய அரசு தமிழில் NEET எழுதலாம் எனவும் அறிவித்துள்ளது.



Inauguration of Android Robo at Velammal School by Mr.Peter Sagayaraj (Jeyam acadamy) Mr.Vinothan.Ka (Director Android Robo), Velammal Principal Madam Hemalatha.

**நிருபர்: NEET பற்றி இன்னும் விரிவாக சொல்லுவீர்களா?**

பதில்: மொத்தத்தில் MCI என்ற இந்திய மருத்துவ கவுன்சில் MBBS மற்றும் BDSக்கான அகில இந்திய அளவிலான போட்டி தேர்வு களை தான் நாம் NEET என்று சொல்கிறோம்.

**நிருபர்: NEET தேர்வில் நன்மைகள் என்ன?**

பதில்: இந்த NEET மூலமாக பல நன்மைகள் உள்ளன.

1. பல்வேறு பாட திட்டங்கள் பயிலும் மாணவர்கள் CBSE, ICSC மற்றும் ISC மாநில பாட திட்டங்கள் அடிப்படையில், நுழைவுத் தேர்வினை முன்பு தனித்தனியாக எழுதுவார் கள். அவை மாற்றப்பட்டு அகில இந்திய அளவில் ஒரே நுழைவுத் தேர்வு அது NEET.

2. CAPITATION FEE குறைவதற்கான வாய்ப்புகள் உள்ளது. ஏனெனில் மாணவர்கள் NEET EXAM PASS செய்தால் கண்டிப்பாக சீட் கொடுக்க வேண்டும் என்கிற உறுதி. இதனால் CAPITATION FEE கண்டிப்பாக தடைபடும் வாய்ப்பு அதிகம்.

3. ஊழலற்ற வகையில், மெடிக்கல் அட்மிஷன் நடைபெறும்.

4. இதற்கு முன்பு தனித்தனியாக மத்திய அரசு EXAM AIMSக்கு தனி GIPMER க்கு தனி AIMS MEDICAL COLLEGE, Army medical college தனி என்கிற விதியிலிருந்து வந்தது. ஆனால் பல காரணங்களால் அட்மிஷன் இந்த NEET தேர்வு மதிப்பெண் அடிப்படையில் எளிதாக மாணவர்கள் விண்ணப்பிக்க முடியும். அதாவது ஒரே NEET தேர்வு மதிப்பெண்ணை வைத்து பல கல்லூரிகளுக்கும் ஒரே நேரத்தில் விண்ணப்பிக்க இயலும் என்பதே இதன் சிறப்பு.

Stress and strain free. அதாவது மாணவ, மாணவியர்கள் பல்வேறு இன்னல்களை ஒரு Pressure ஒரு depression குறிப்பாக மருத்துவ படிப்புக்கு தயாராகும் மாணவ, மாணவியர்கள் மிகுந்த இன்னல்களுக்கு உள்ளாகின்றனர். இந்த NEET தேர்வு அந்த வகையில் பல இன்னல் களிலிருந்து நம் மாணவ, மாணவியர்களுக்கு விடுதலை கொடுத்துள்ளது என்பதுதான் உண்மை.

**நிருபர்: மொத்தமாக நம் நாட்டில் எத்தனை மருத்துவக் கல்லூரிகள் உள்ளன?**

பதில்: ஏறக்குறைய 63,000 மருத்துவ இடங்கள் நம் நாட்டில் உள்ளன. குறிப்பாக, அரசு மருத்துவக் கல்லூரிகளில் 25,000ம், தனியார் கல்லூரிகளில் 38,000 இடங்கள் உள்ளன.

**நிருபர்: தமிழகத்தில் மருத்துவ மாணவ, மாணவியர்களுக்கான கல்வி சேர்க்கை எத்தனை? அது எவ்வாறு மத்திய ஒதுக்கீடு, மாநில ஒதுக்கீடு என பிரிக்கப்படுகிறது?**

பதில்: தமிழகத்தில் 2,600 MBBS சீட்டுகள் உள்ளன. மத்திய ஒதுக்கீடு 15%ம் அதாவது 350 இடங்களும், மாநில ஒதுக்கீடாக 85%ம், அதாவது 2250 இடமும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

**நிருபர்: இந்த NEET தேர்வு கள் எப்படி அமலுக்கு வந்தன?**

பதில்: உச்ச நீதிமன்ற ஆணைப்படி இந்த NEET எனும் அகில இந்திய பொது நுழைவுத்தேர்வு நடைமுறைக்கு வந்துள்ளது.

**நிருபர்: இதனுடைய சிறப்பு அம்சமாக நீங்கள் கருதும் கருத்துக்களை சொல்லுங்களேன்?**

பதில்: சிபிஎஸ்இ, ஐசிஎஸ்இ, ஸ்டேட் போர்டு, இன்டர்நேஷனல் என பல்வேறு வகையான கல்வி முறையில் பயின்று வரும் மாணவ, மாணவியர்களை மதிப்பெண் அடிப்படையில் சேர்க்க இயலாது. ஆகவே இந்தியா முழுவதும் ஒரே பொது நுழைவுத்தேர்வு மூலம் மட்டுமே அந்த மாணவ, மாணவியர்களின் தகுதி ஆய்வு செய்யப்பட்டு அவர்கள் பெறும் மதிப்பெண்கள் அடிப்படையில் மாணவ, மாணவியர்களுக்கு மருத்துவ இடங்கள் ஒதுக்கப்பட்டு வருகின்றன. இதனால் அகில இந்திய அளவில் போட்டி போடுவதால் மத்திய அரசு தொகுப்பில் சேருவதற்கு நமது மாணவ, மாணவியர்களுக்கு வாய்ப்பு கிடைக்கிறது. மேலும் ஒரு சிறப்பு என்னவெனில் முன்பு ஒவ்வொரு வகையான கல்லூரிகளுக்கும் தேர்வு எழுத வேண்டிய நிர்பந்தம் இருந்தது. ஆனால் NEET தேர்வின் வழியாக பெறும் ஒரே மதிப்பெண்ணை வைத்து இந்தியா முழுவதும் உள்ள பல கல்லூரிகளில் சேரும் வாய்ப்பு நமது மாணவ, மாணவியர்களுக்கு கிடைத்துள்ளது பெருமையான விஷயம் தான்.

**நிருபர்: அகில இந்திய அளவில் மத்திய அரசின் ஒதுக்கீடு எவ்வளவு உள்ளது?**

பதில்: தமிழகத்தில் கொடுக்கப்பட்டுள்ள 350 இடங்களும் சேர்ந்து மொத்தம் 3750 இடங்கள் உள்ளன.

**நிருபர்: மாநில அளவில் மருத்துவ இடங்கள் சமூக அடிப்படையில் எப்படி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது?**

பதில்: மாநில அளவில் 2250 இடங்களுக்கு ஓ.சி. (பொது பிரிவு) 31%ம், பி.சி. (பிற்படுத்தப்பட்டோர்) 26.5%ம், பிற்படுத்தப்பட்டோர் (எம்) முஸ்லீம் 3.5%ம், ஆக மொத்தம் பிற்படுத்தப்பட்டோர் 30%ம், எம்.பி.சி. (மிகவும் பிற்படுத்தப்பட்டோர்) 20%ம், எஸ்.சி. (தாழ்த்தப்பட்டோர்) 16%ம், எஸ்.டி. (பழங்குடியினர்) 1%ம், டி.எம்.சி. (சீர் மரபினர்) 1%ம் என பிரித்து கொடுக்கப்பட்டு வருகிறது.

**நிருபர்: மத்திய அரசுக்கான மருத்துவ இடங்களில் இட ஒதுக்கீடு என்பது எந்த வகையில் முறைப்படுத்தப்படுகிறது?**

பதில்: மத்திய அரசில் ஓ.சி. (பொது பிரிவு) 50.5%ம், ஓ.பி.சி. (பி.சி மற்றும் எம்.பி.சி) 27%ம், எஸ்.சி. 15%ம், எஸ்.டி. 7%ம் ஒதுக்கீடாக முறைப்படுத்தப்பட்டு வருகிறது.

**நிருபர்: MCI என்னும் (இந்திய மருத்துவ கவுன் சில்) பாடத் திட்டங் களுக்கும், பிலிப்பைன்ஸ், ரஷ்யா, சீனா போன்ற நாடு களில் பயிலும் பாடத்திட்டங் களுக்கும் எந்த வகையான வித்தியாசங்கள் உள்ளன?**

பதில்: நமது நாட்டில் MCI இந்திய மருத்துவ கவுன்சில் பாடத்திட்டம் பிற நாடுகளின் பாடத்திட்டங்களை விட சிறந் ததாக உள்ளது. இந்திய மருத்துவ கவுன்சில் சீரிய ஆய்வுக்கு பின்னரே உலகத் தரம் வாய்ந்த மருத்துவக் கல்வியை வழங்க வேண்டும் என்ற உயரிய கருத் தோடு பாடத்திட்டங்கள் அமைந் துள்ளது வரவேற்கத்தக்கது.

எங்கள் கேள்விக்கனைகளுக்கு ஈடாக துல்லியமான பதில்களை தந்து, அதில் உள்ள அனைத்து விதமான சந்தேகங்களுக்கும் விளக்கமறித்த வகையில், தங்களுக்கு SCHOOL VOICE சார்பிலும் இதனை படித்து பயன்பெறும் அனைவர் சார்பிலும் நன்றி சொல்ல கடமைப்பட்டிருக்கின்றோம்.

**JEYAM ACADAMY DIRECTOR**

ஜெயம் அகாடமி இயக்குனர்: திரு. பீட்டர் சகாயராஜ் அவர்களை 82205 35010 செல்போன் மூலமாக எந்த வித சந்தேகங்களையும் தீர்த்து வைத்திட காத்திருக்கிறார் என்பது மகிழ்ச்சியே.

– மாத்தியோசி மகேந்திரன்


UNIVERSITY ASSESSMENT & CERTIFICATION

- University Certification at School Level
- School Students become the student of University
- Learn and Enhance their IT Skills

University Recognized SKILL SCHOOL
a GISD Initiative

9841277477 / 8695177755
e-mail: skillschoolgisd@gmail.com | gisdindia@gmail.com

GLOBAL INSTITUTE FOR SKILL DEVELOPMENT India (P) Ltd.,



## Justice Jagdish Singh Khehar as the 44th Chief Justice of India.



He has sworn in as CJI New Chief justice of india. He would remain in office from January 4, 2017 till August 4, 2017. He assumed office as a Judge in the Supreme Court on September 13, 2011. Justice Khehar led the constitution bench which held the NJAC Act unconstitutional.

## State cannot direct Minority Institutions to absorb teachers: Bombay High Court

Nagpur bench of the Bombay High Court has held that minority institutions cannot be directed by the state government to absorb surplus employees from other institutions.

The bench observed that the Bombay High Court had previously, in a reported judgement of 2014 held that minority institutions cannot be compelled to absorb surplus teachers from other schools to their schools. This judgement was pronounced by a division bench headed by Justice VM Kanade in Cannossa Society v. Commissioner, Social Welfare, Pune. Holding that the state cannot make such appointments without a minority institutions consent, the said order reads thus- "The State authorities cannot indirectly do an act which cannot directly be done. In other words, when the State has no authority to make appointment of teaching and nonteaching staff in respect of a minority institution,even if aid has been granted, such action of making an appointment cannot be taken by directing absorption of a surplus employee. This is nothing but, making appointment of a staff member in a minority institution. The law confers no such authority and power with the State Government to thrust an employee rendered

surplus in other schools to be absorbed by a minority institution. Rule 25 A of the Maharashtra Employees of Private Schools (Conditions of Services) Rules cannot be made applicable to appoint surplus staff in a minority

All earlier orders passed by the Education Officer were quashed and set aside

# சங்க மாநாட்டின் தீர்மானங்கள்...

### நில அளவை குறைத்திட...

R.T.E. Act 2009க்கு முன் ஆரம்பிக்கப்பட்ட அளவு குறைந்த மெட்ரிக், அரசு உதவி பெறும் தனியார் உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளுக்கு நில அளவை G.O.49 நில அளவை G.O.48 மற்றும் G.O. 24, X2 லிருந்து முழு விலக்கு அளிக்கப்பட வேண்டும் என கோரிக்கை இம்மாநாட்டின் சார்பாக தமிழக அரசை கேட்டுக் கொள்கிறோம்.

எமது கோரிக்கையை ஏற்று தமிழக அரசின் புதிய G.O. 134 Less land பள்ளிகளுக்கு 2016 வரை தொடர் அங்கீகாரம் கொடுக்கப்பட்டு வருகிறது. இதற்காக எமது சங்கத் தின்சார்பாகவும், ஸ்கூல் வாய்ஸ் சார்பாகவும் தமிழக அரசுக்கு பாராட்டுக்கள். மேலும் எமது இப்பள்ளிகளுக்கு G.O.48, G.O.49 மற்றும் G.O.24x2 ஆகியவற்றிலிருந்தும் முழுவிலக்கு அளிக்கப்பட வேண்டும் என்பதே எமது சங்கத்தின் கோரிக்கையாகும்.

### 8ம் வகுப்பு வரை அங்கீகாரம் வழங்க வேண்டும்

மழலையர் மற்றும் தொடக்கப் பள்ளிகள் RTE ACT 2009ன்படி சாரம்சத்தின்படி 1 முதல் 8ம் வகுப்பு வரை தரம் உயர்த்தி அங்கீகாரம் வழங்க வழி செய்ய வேண்டும் என தமிழக அரசை கேட்டுக் கொள்கிறது.

### CMDA, DTCP விதிகளிலிருந்து விலக்கு அளிக்க...

உயர்நீதிமன்ற தீர்ப்பின்படி LPA, CMDA அனுமதியின்றி D.C.T.P. அனுமதி மட்டும் பெற்று கட்டிடங்களில் நடைபெறும் பள்ளிகளுக்கும் L.P.A. அனுமதி விதிகளிலிருந்து விலக்கு உள்ளது. எனவே L.P.A. அனுமதி மற்றும் CMDA அனுமதி இல்லாமல் தொடர்ந்து தொடர் அங்கீகாரம் பெற்று வந்த மெட்ரிக் பள்ளிகளையும் நர்சரி பள்ளிகளையும் தமிழக கல்வித்துறை தொடர்ந்து தொடர் அங்கீகாரம் வழங்கிட நமது சங்கம் இம்மாநாட்டின் மூலம் கேட்டுக் கொள்கிறது. ஏற்கனவே நடைபெற்று வரும் நர்சரி மெட்ரிக் பள்ளிக்கு LPA MMDA விதிகளிலிருந்து விலக்களிக்க தமிழக அரசை கேட்டுக் கொள்கிறோம்.



### ஒரே தேசம் ஒரே பாடத்திட்டம்

சமச்சீரற்ற சமச்சீர் கல்வி கடந்த ஆட்சியில்தான் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டது. ஆனாலும் இச்சமச்சீர் என்பது தரம் குறைந்த கல்வியாகவே உள்ளது என்பதை மறுக்கலாகாது. மேலும் CBSE ICSE மற்றும் INTERNATIONAL SYLLABUS போன்ற பல்வேறு வகையான தமிழகத்தில் உள்ள சமச்சீரை கேள்விக்குறியாக்கி உள்ளன. சென்னை I.I.T நுழைவுத்தேர்வில் தேர்வெழுதிய தமிழக மாணவர்கள் 2815 பேரில் 451 பேர்தான் தேர்ச்சி பெற்றுள்ளனர். இதில் 418 பேர்கள் CBSE பாடத்திட்டத்தில் பயின்றவர்கள். மாநில பாடத்திட்டத்தில் (CCE) பயின்றவர்கள் 33 பேர்தான். இதுவே நமது சமச்சீர் கல்வியின் (CCE Method) தேர்வுக்கு எடுத்துக்காட்டு. மேலும் அண்டை மாநிலமான ஆந்திராவில் 3024 IITக்கு தேர் வுக்கு செய்யப்பட்டுள்ளனர் என்பதும் தமிழகத்தில் சமச்சீர் கல்வி தரம் தாழ்ந்துள்ளதையே காட்டுகிறது.

மேலும் 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை பாடத்திட்டத்தை மாற்ற வேண்டும். ஆனால் 11 ஆண்டுகளாகவே இப்பாடத் திட்டத்தில் குறிப்பாக +1 மற்றும் +2 பாடத்திட்டத்தில் மாற்று முயற்சிகளில் கல்வித்துறை ஈடுபடவில்லை.எனவே, வளரும் நம் மாணவர்களின், நம் சந்ததிகளின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டும், சமச்சீர் கல்வி என்பதை தேசிய மயமாக்க வேண்டும் என்கிற கோரிக்கையின் அடிப்படையில் CBSE பாடத்திட்டத்தையே நமது சமச்சீர் பாடத்திட்டமாக ஏற்றுக் கொள்ளும் ஆணையை தமிழக அரசு உத்தரவிட இம்மாநாட்டின் சார்பாக கோரிக்கை வைக்கப்படுகிறது. அல்லது சமச்சீர் கல்வியை CBSEக்கு இணையாக தரம் உயர்த்த வேண்டும் என தமிழக அரசை எம் சங்கம் கேட்டுக் கொள்கிறது.

### நிரந்தர அங்கீகாரம் வழங்கப்பட வேண்டும்

மேலும் 10 ஆண்டுகள் தொடர் அங்கீகாரம் பெற்ற பள்ளிகளுக்கு நிரந்தர அங்கீகாரம் வழங்கிட வேண்டும் என்று எமது சங்கம் தமிழக அரசை கேட்டுக் கொள்கிறது.



ராஜசேகரன்
கௌரவ தலைவர்



### திரு. உசைன் பாபு அவர்களின் HOTEL NESTLEY CASA திறப்பு விழா

விழாவில் நமது தலைவர் மார்டின் கென்னடி, காஞ்சிபுரம் மாவட்ட தலைவர் பிரின்ஸ் பாபு ராஜேந்திரன், சங்கத்தின் பொறுப்பாளர் நீலன் அரசு மற்றும் ஸ்கூல் வாய்ஸ் எடிட்டர் வழக்கறிஞர் ஜான்.

## NEP- SYMPOSIUM - PRESIDED BY DR.MANNAR JAWAHAR Former V.C. Anna University















டாக்டர் மன்னர் ஜவகரின் சீர்மிகு உரை





















make your students future ready

ANDROID ROBO

FUTURE BEGINS HERE

ROBOTIC EDUCATION AT SCHOOLS

Open up the World of Robotics to your Students

through Android Robo, a company training over 35,000 students in over 90 Schools

Zero investment for Schools | We invest on Kit Boxes | We provide teaching staff | We provide course material | We take care of the entire process

BENEFITS TO THE STUDENTS

Knowledge on Mechanical, Electronics, Electrical and Programming | Knowledge on S.T.E.A.M

Increased Observation, Cause and Effect | Increased Thinking | Induced Creativity

AN UNIT OF IWIZ ANDROID ROBO PVT LTD

Building Future Scientists

Give your students the best.

Call us today, we'll take care of the rest

+91 99412 64064

shiva@androidrobo.com | www.androidrobo.com | facebook.com/androidrobo